# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை : 100/= இதழ் 113 08.06.2025


# இயற்கையை பாதுகாப்போம்...



- சிற்பங்களுக்குள் ஒழிந்திருக்கும் வாழ்வாதாரம்.
- உங்கள் வரி – உங்கள் எதிர்காலம்' – 'தேசிய வரி வாரம்'
- போரும் வடக்கு – கிழக்கு விவசாயமும்
- சூரிய காந்தி

தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY



# சிற்பங்களுக்குள் ஒழிந்திருக்கும் வாழ்வாதாரம்.

நாம் ஆரம்பத்தில் களிமண்ணால் பொம்மைகளையும், உருவங்களையும் வடிவமைக்க பழகினோம், அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு தற்போது அலங்காரப் பொருட்களையும், சிலைகளையும் களிமண், மற்றும் பைபர், போன்ற மூலப் பொருட்களைக் கொண்டு வடிவமைக்கக் கற்றுக்கொண்டோம், இதிலாவது எமது வாழ்வாதாரத்தைப் பெருக்கலாம் என நினைத்துக்கொண்டுதான் நாம் இதில் காலடியெடுத்து வைத்தோம் ஆரம்பத்தில் எமக்கு ஓரளவு வருமானம் கிடைத்தது, தற்போது மெல்ல மெல்ல எமது தொழில் நகர்கின்றது.

மூலப் பொருளான ஒரு கிலோ பைபர் 500 ரூபாவாவுக்கு மேலாகின்றது. இது ஒருபுறமிருக்க இந்தியா, சீனா போன்ற பல நாடுகளில் எம்மைப்போன்ற கிராமியத் தொழிலாளர்களுக்கு அங்குள்ள அரசும், அரச சார்பற்ற அமைப்புக்களும், பல்வறு உதவிகளையும், பயிற்சிகளையும், வழங்கு கின்றனர். ஆனால் நாம் தாமாகவே எமது முயற்சியின் பலனாக பெற்றுக் கொண்டு சிறியளவில் மேற்கொள்ளும் இத்தொழிலுக்கு ஏற்ற வருமானம் போதாதுள்ளது.

எமக்குத் தற்போதைய நிலையில் மூலதனம், இதனை மேற்கொள்வதற்குரிய இயந்திர வசதிகள், உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகள், தேவையாகவுள்ளன. என மட்டக்களப்பு மாவட்



டம் பெரியபோரதீவு கிராமத்தில் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு வரும் அலங்கார பொம்மை உற்பத்தியாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

மனிதன் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக தினம் தினம், உழைத்துக் கொண்டுதான் இருக்கின்றான். அவரவர் முயற்சியுடன் உழைத்துக் கொண்டிருந்தாலும், சிலருக்கும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம், அல்லது வருமானமின்றியே தாம் கற்ற அல்லது தமக்குத் தெரிந்த தொழில்களைச் செய்து கொண்டே தமது வாழ்நாளைக் கழித்து வருகின்றார்கள். எனினும் முதலாளி வர்க்கத்தினர் ஏதோ ஒரு வகையில் தத்தமது வருமானங்களைப் பல்கிப் பெருகிக் கொண்டு சென்றாலும், பிரதேச மட்டங்களில், குடிசைக் கைத்தொழில்காளாக மேற்கொள்ளும், தொழிலாளர்கள் காலத்திற்கு காலம் அவ்வப்போது வரும் இடர்களினாலும், இன்னல்களாலும், அவர்கள் பெறும் வருமானங்களை இழக்கச் செய்கின்றார்கள்.

இந்நிலையில் அலங்கார சிலைகள், பொம்மைகள் மற்றும் உருவங்கள் செய்து விற்பனை செய்யும் மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரதீவு, களுதாவளை, களுவாஞ்சிகுடி பிரதேசங்களில் இவ்வாறு அலங்கால உற்பத்தியாளர்கள் தமது தொழல்களை மிகவும் சவால்களுக்கு மத்தியில் முன்னகர்த்தி வருகின்றார்கள்.

குறிப்பாக, நாளாந்தம் தமது பிரதான தொழிலாக இச்சிலைகளை செய்து விற்பனை செய்யும் கைப்பணியாளர்கள் தமது நாளாந்த வருமானத்தினை ஈட்ட முடியாமலுள்ளதாகவும் வெளி மாவட்டங்களுக்கு தமது உற்பத்தி பொருட்களை அனுப்ப முடியாமலுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

களுதாவளை பிரதேசத்தில் உள்ள சிலை செய்வர்கள் சீமெந்தை மூலப் பொருளாக கொண்டு சிலைகளை செய்வதுடன் சகல சிலைகளும் கைகளாலேயே செய்து வருகின்றனர்.



அவர்கள் இறை வழிபாட்டிற்குரிய சிலைகள், அலங்கார பொம்மைகள், அழகுபடுத்தும் பொருட்கள் ஆகியவற்றினை செய்வதுடன், பரம்பரை பரம்பரையாக இச்சிலைகள் வடிக்கும் கலையினை கற்று செய்வதாக கூறுவதுடன், எனினும் தமது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த முடியாமலுள்ளதாகவும்,

தமிழர் பொருண்மியம்
வாரமலர் TAMILS ECONOMY



சந்தையில் எமது உற்பத்திக்கு ஏற்ற கேள்விகள் குறைவாக்கவுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பெரியபோரதீவு பகுதியில் சிலை செய்யும் தொழிலை ஓர் இடத்தில் தமது வாழ்வாதார மேம்பாட்டு தொழிலாக 20 இற்கு மேற்பட்ட பெண்கள் செய்து வருகின்றனர். குறிப்பாக இவர்கள் களிமண், டொலமைற் பவுடர், பைபர் போன்ற மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிற வர்ணங்களைக் கொண்டு இறை வழிபாட்டு உருவங்கள், கலாசார உருவங்கள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் போன்றவற்றை உற்பத்தி செய்து வருகின்றனர்.



தாம் உற்பத்தி செய்யும் சிலைகளை கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற மிகத் தொலைவிலுள்ள மாவட்டங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விற்பனை செய்துவரப்படுகின்றன.

கடந்த கொவிட் - 19 காலத்தில் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவோ, விற்பனை செய்யவோ முடியாமல், அவைகள் அனைத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அக்காலத்தில் தமது வாழ்வாதாரம் அடியோடு அதள பாதாளத்தை நோக்கிச் சென்றிருந்ததாகவும், தற்போது அது மெல்ல மெல்ல மேலோங்கி வருவதாகவும், அக்கைவினைக் கலைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுபோல் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் சீமெந்தினை மூலப் பொருளாக கொண்டு அச்சுகள் மூலமாக சிலையினை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் அலங்கார உருவங்கள், கட்டிட அலங்கார பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகின்றனர்.

அரச உத்தியோகஸ்த்தர்களும், ஏனைய துறைசார்ந்தவர்களும், மாதாந்தம் பல்லாயிரக்கணக்கில் வேதனம் பெறுகின்ற போதிலும், இவ்வாறு குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படுகின்ற அலங்காரச் சிலைகள், மற்றும், பொம்மைகள் உற்பத்தி செய்யும் மொழிலாளர்கள் மாதாந்தம் 12000 ரூபா தொடக்கம், 15000 ரூபா வரைத்தான் வேதனம் பெறுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வரைக்கும் அரசினால் நிறுவப்பட்டுள்ள இந்நிலையில் இவ்வாறாக கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் குடிசைக் கைத்தொழில்களையும் விருத்தி செய்து கொடுக்கப்பட வேண்டியது துறைசார்ந்த அதிகாரிகளினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் தலையாய கடமையல்லவா?







இது ஒருபுறமிருக்க இவ்வாறு தமது பெரும் சிரமத்திற்கு மத்தியிலும், முயற்சியின் மத்திக்கத்திலும் தமக்குத் தெரிந்த இத்தொழிலை மேற்கொள்ளும் தமக்கு தற்கால நவீனத்துவத்திற்கு ஏற்ற வகையில் துறைசார்ந்த பயிற்சிகளையும், அவற்றுக்குரிய நவீனத்துவ இயந்திரங்களையும் அதிகாரிகள் வழங்க வேண்டும். இதுவரையில். தமங்கு அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களோ எதுவித உந்துசக்தியையும் வழங்காத நிலையில் ஏனைய துறைகளுக்கு உதவுவதுபோல் தமது சிற்பக் கலையுடனான வாழ்வாதாரத்திற்கும் சம்மந்தப்பட்டவர்கள் உதவுவதற்கு முன்வரவேண்டும். என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு அதிகளவு தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள் பல சமூகசேவைகளையும், நலிவுற்ற மக்களின் வாழ்வாதார மேபாட்டிற்கும் உதவிவருவதாகவும் நாம் அறிகின்றோம். கிராமிய மட்டத்தில் எமக்குத் தெரிந்த உற்பத்திகளை மேற்கொண்டு அதனூடாக சிறிதளவேனும் வருமானமீட்டிவரும் தமக்கு புலம்பெயர் அமைப்புக்களும் உதவ முன்வரவேண்டும் என்பதோடு, தமது படைப்புக்களை புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் கொள்வனவு செய்யும் பட்சத்தில் தமது வாழ்வாதாரம் மேலும் மேம்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அந்த சிற்பக் கலைஞர்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப் படும் வாழ்வாதார உற்பத்திகளுக்கு உந்துசக்தி யளிக்கப்டும் பட்சத்தில் துறைசார்ந்த மக்களின் வாழ்வாதரம் மேலோங்கி வருமானமும் அதி கரிக்கும். இதனூடாக கிராமிய பெருளாதாரமும் ஆங்காங்கே விருத்தியடைந்து செல்லும் என்றால் அது மிகையாகாது.

வ.சக்திவேல்
சமூக ஆய்வாளர்





# "உங்கள் வரி – உங்கள் எதிர்காலம்" – "தேசிய வரி வாரம்"

"வரிகள் என்பது நாகரிகத்திற்கு நாம் செலுத்தும் விலை அல்ல; அவை நமது கூட்டு எதிர்காலத்தில் நாம் செய்யும் முதலீடு"

வரி என்பது அரசியல் ஆசைகளுக்குப் பயன்படும் கருவியாக இல்லாமல் மக்களின் நலனுக்காக முறையாக கையாளப்பட வேண்டிய பொது நிதி ஆதாரம். இந்நிலையில் 2025 ஜூன் 2 ஆம் திகதி **"வரி சக்தி – தேசிய வரி வாரம்"** என்ற முழுமையான வேலைத்திட்டத்தைத் தொடங்கியுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களின் முயற்சி, வரி நடவடிக்கைகள் குறித்து இலங்கையில் ஒரு புதிய, நம்பகமான மற்றும் பொறுப்பான கலாசாரத்தை உருவாக்கும் முதன்மை முயற்சியாக பார்க்கப்படுகின்றது.

## வரி சக்தி வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

1. *வரி செலுத்தும் கலாசாரத்தை ஊக்குவித்தல் -*

   பொதுமக்கள் வரிகள் வீணடிக்கப்படுவதாகும் தவறான நம்பிக்கையிலிருந்து வெளிவந்து, நாட்டின் அபிவிருத்திக்கு இது எவ்வாறு பங்களிக்கின்றது என்பதை புரிந்து கொள்ளும் சூழல் உருவாக்கவேண்டும் என்பது இந்நிகழ்ச்சியின் முதன்மை நோக்கமாகும்.

2. *பொதுமக்கள் நம்பிக்கையைப் பெறும் அரசாங்க மாதிரி –*

   "ஒரு ரூபாய் கூட மோசடியாகாது" என்ற ஜனாதிபதியின் உறுதி, வரிப்பணத்தின் போக்குவரத்தில் முழுமையான கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்துகின்றது.

3. *சட்ட விரோத வர்த்தகங்களுக்கும், கறுப்பு பொருளாதாரத்துக்கும் முடிவுக்கு கட்டுப்பாடுகள் –*

   சுங்கம், மதுவரி, வரிவிதிப்பில் ஊழல், சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் அதிகாரிகளின் தவறான நடத்தை ஆகியவற்றுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

## வரிக் குறைந்தளவு இணக்கம்: எண்ணிக்கைகள் பேசும் உண்மைகள்

அரச தரவுகளின்படி,

- பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் 43% மாத்திரமே வரி அறிக்கைகள் தாக்கல் செய்துள்ளனர்.
- தனிநபர் வருமான வரி அறிக்கைகள் – 23%
- கூட்டு வர்த்தக அறிக்கைகள் – 46%
- PAYE/APIT வரி அறிக்கைகள் – 18%

இந்த எண்கள் 50% ஐ மீறாத நிலையில் உள்ளன என்பது, வரிச் செலுத்தும் கலாசாரம் நிலைத்து இருக்கவில்லை என்பதையும், மக்கள் மனதில் நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது என்பதையும் காட்டுகின்றது.

## திறமையான நிர்வாகம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம்

- ASYHUB என்ற புதிய சுங்க மேலாண்மை அமைப்பு அறிமுகமாகியுள்ளது.
  ASYHUB என்பது பல்வேறு நாடுகளின் சுங்கத் தகவல் முறைமைகள் மற்றும் வர்த்தகத் தரவுகள் இடையே தகவல்களை செயலாக்கவும் பரிமாறவும் உதவும் ஒரு திறந்த, தரநிலைப்படுத்தப்பட்ட தளம் ஆகும்.
- மதுவரி பாதுகாப்பு அடையாள முறைமைகள் தொழிநுட்ப வாயிலாக வலுவாக்கப்படுகின்றன.
- 2024/25 வருமான வரி அறிக்கைகளை இணையத்தில் சமர்ப்பிக்கும் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசாங்கத்திற்கும், வரிச் செலுத்துவோருக்கும் இடையேயான தொடர்பை விரைவாகவும், சீராகவும் மாற்றும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

## திறமையான நிர்வாகம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம்

"வரி சக்தி" வேலைத்திட்டத்தின் முக்கிய அச்சமாகவும், வரி ஒழுங்குமுறை மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கான அடித்தளமாகவும் பார்க்கப்படுகின்றது.

1. நிர்வாகத் திறன் – ஆளுமையின் ஊக்கம் - திறமையான நிர்வாகம் என்பது:

- பணிகள் நேரத்தில், சட்டப்படி, பயனாளருக்கு நன்மையளிக்கும் வகையில் செயல்படுவது

- அதிகாரத்தின் பயன்பாட்டில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்வது
தரமான சேவைகளை வழங்குவது
இது வரித்துறையிலும் மிகவும் தேவைப்படும் ஒன்று. காரணம்:

- வரி செலுத்தும் நபர் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டுமானால், முதலில் அரசாங்கமும் நேர்மையுடனும் திறமையுடனும் செயல்பட வேண்டும்.

- சுங்கம், மதுவரி, வருமானவரி உள்ளிட்ட துறைகள் நிர்வாகக் குறைகளால் பாதிக்கப்படும்போது மக்கள் நம்பிக்கையிழந்து வரியை தவிர்க்க முயற்சிக்கின்றார்கள்.

2. டிஜிட்டல் பரிணாமம் – எளிதாக்கப்பட்ட சேவை, அதிகமான நம்பிக்கை

Digital Transformation என்பதன் பொருள் அரச சேவைகள் நேரடி தொடர்பின்றி, தொழில்நுட்ப மூலமாக, எளிதாக, வேகமாக, பாதுகாப்பாக செயல்படுவதை குறிக்கின்றது.

"வரி சக்தி" வேலைத்திட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட டிஜிட்டல் நடவடிக்கைகள்:

*ASYHUB – சுங்கத்துறைக்கான நவீனமைப்பு:*

- இறக்குமதிக்குப் பூர்வமாகவே ஆவணங்கள் சமர்ப்பிக்கலாம்.

- அபாய முகாமைத்துவ மென்பொருள் மூலம், ரிஸ்க் புரொஃபைல் (Risk Profile) அடிப்படையில் சோதனைகள் செயற்படும்.

- சட்டவிரோத மற்றும் தாமத மான சுங்க அனுமதிகளை கட்டுப்படுத்தும்.

*இணையம் வழியாக வருமானவரி தாக்கல்:*

- 2024/25 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரி அறிக்கைகள் இணையத்தில் தாக்கல் செய்யும் வசதி அறிமுகம்.

- ஜனாதிபதி நேரில் தனது வரி அறிக்கையை இணையத்தில் பதிவு செய்த நிகழ்வு, பொதுமக்களுக்கு முன்மாதிரியாக விளங்கியது.

- மதுவரி பாதுகாப்பு அடையாள செயலி:
  - மதுபான பாட்டில்கள் போன்ற சட்டப்பூர்வமான தயாரிப்புகளை QR கோடு அல்லது ஸ்கேன் (Scan) மூலமாக சோதிக்கலாம்.
  - இது வரி ஏமாற்றங்களை தடுக்கும் முக்கிய மையமாகும்.

*3. டிஜிட்டல் மாற்றத்தின் பலன்கள்*

**அம்சம்:**

- விரைவான சேவை

**விளக்கம்:**

வரிகள்/சுங்கம் உள்ளிட்ட சேவைகள் நேரில் செல்லாமல் ஆன்லைனில் (Online) முடிக்க முடியும்.

**அம்சம்:**

- வெளிப்படைத்தன்மை

**விளக்கம் :**

ஒவ்வொரு நடவடிக்கையும் பதிவாகி, கண்காணிக்க வசதியாகின்றது.

**அம்சம்:**

- ஊழலைக் கட்டுப்படுத்துதல்

**விளக்கம் :**

மனித தொடர்புகள் குறைவதால், சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகள் குறையும்

**அம்சம்:**

- மக்களுக்கான நம்பிக்கை

**விளக்கம் :**

அரசு நேர்மையாக செயல்படுகின்றது என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது

## 4. எதிர்காலத் திட்டங்கள்

- வரியாளர்களுக்கான தனிப்பட்ட கணக்குகளை உருவாக்குதல் (Tax-payer dashboard)

- வரிச் சான்றிதழ்கள், வருமானப் பத்திரங்கள் அனைத்தையும் ஆன்லைனில் (Online) பதிவிறக்கம் செய்யும் வசதிகள்.

- செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மேஷின் லெர்னிங் (ML) மூலமாக வரி ஏய்ப்பை அடையாளம் காண்பது

- அரசு மற்றும் பொதுமக்கள் இடையிலான நம்பிக்கை பாலமாக இயங்கும் திறமையான வரித்துறை கட்டமைப்பை உருவாக்குவது

"வரி சக்தி" வேலைத்திட்டம் ஒரு நிர்வாகச் சீர்திருத்தத்தை மட்டுமல்ல, ஒரு வெளிப்படையான, நவீன, நம்பகமான வரிக் கலாசாரத்தை உருவாக்கும் முயற்சி. அதன் இரு துணைமுனைகள்:

- திறமையான நிர்வாகம்
- முழுமையான டிஜிட்டல் பரிணாமம்

இந்த மாற்றங்கள், இலங்கை வர்த்தக சூழலை சர்வதேச நிலைக்கு ஏற்றவாறு வடிவமைக்கும் முக்கிய கட்டங்களாகும்.

## விரிவான நிதி சீர்திருத்த நோக்கங்கள்

ஜனாதிபதி உரையில் குறிப்பிடப்பட்டபடி,

- 1996இல் தேசிய உற்பத்தியில் வரி வருமான பங்கு 23% ஆக இருந்தது.

- தற்போது அது 7.3% ஆக குறைந்துள்ளது. இது நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு நேரடியாக காரணமாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

வெளிநாட்டு கடன் உதவிகள், IMF உடன்பாடுகள் போன்றவை நமது நிதியமைப்பை கட்டுப்படுத்தும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன. எனவே, உள்நாட்டு வரி வருமானத்தை மேம்படுத்துவதே நாட்டை மீ மீள் எழுப்பும் வழியாகும்.

## வியாபாரிகளுக்கான அழைப்பு

ஜனாதிபதி வழங்கிய உறுதிகள்:

- உங்களிடம் மின்சாரம், காணி, தண்ணீர் வசதி இல்லையா? அரசாங்கம் அதனை வழங்கும்.

- ஆனால் நீங்கள் நியாயமான வரியை தவறாமல் செலுத்த வேண்டும்.

இதன் மூலம், அரசு நியாயமான வரிப்பணங்களை மட்டுமே எதிர்பார்க் கின்றது என்றும், அவை தேசிய அபி விருத்திக்கே பயன்படுத்தப்படும் என் றும் உறுதி வழங்கப்படுகின்றது.

இங்கே "வியாபாரிகளுக்கான அழைப்பு", "வரி சக்தி" வேலைத் திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமா கும், குறிப்பாக எம்.எஸ்.எம்.இ (MSME), தொழிலதிபர்கள், மற்றும் தனியார் முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு நேரடி தொடர்புடையதாகும்.

**வியாபாரிகளுக்கான அழைப்பு – ஒரு அரசியல் வாக்குறுதி அல்ல, தொழில்முறை ஒப்பந்தம்**

ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க அவர்கள் வியாபாரிகளுக்கு விடுத்துள்ள இந்த அழைப்பு, வசதிக்கே பதிலாக பொறுப்பும், அரச ஆதரவை நோக்கமாகக் கொண்ட நேர்மையான வரிச்செலுத்தலும் ஆகிய இரண்டும் இணைந்த ஒரு சமூக ஒப்பந்தம் ஆகும்.

*அரசாங்கம் வழங்கும் ஆதரவு – உங் களுக்கான உட்கட்டமைப்பு*

- மின்சாரம்: உங்கள் தொழில் வளர்ச்சிக்கு தேவையான மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில், அரசாங்கம் தேவையான முதலீடு களை மேற்கொண்டு மின் இணைப்பை உடனடியாக வழங் கும்.

- காணி: தொழிற்சாலைகளுக்கோ, கைத்தொழில் யூனிட்டுகளுக்கோ தேவையான காணிகளை, தொழில் துறை மண்டலங்கள் (Industrial Zones) மூலமாக குறைந்த விலை யில் வழங்கும்.

- தண்ணீர் வசதி: உற்பத்தி மற் றும் சேவை தொழில்களுக்கு தேவையான கைத்தொழில் தண் ணீர், குடிநீர் வசதி ஆகியவற்றை தொழில் ஆதரவு திட்டங்களின் கீழ் பெற்றுத் தர அரசாங்கம் நிபந்தனையுடன் உறுதி வழங்கி யுள்ளது.

- பாதை/வீதிகள்: விநியோகச் சங்கிலி தடையின்றி இயங்க வாகன போக்குவரத்துக்கான வீதிகள் சிறப் பாக திட்டமிடப்படும்.(மாநிலசாலை கள், துறைமுக தொடர்பு வீதிகள், வர்த்தக மைய இணைப்புகள்)

*நிபந்தனை – நியாயமான வரி செலுத்துதல்*

அரசாங்கம் எதிர்பார்ப்பது ஒன்றே - "மக்கள் சட்டப்படி வருமா னத்தை அறிவித்து, அதற்கேற்ப வரியை நேர்மையாக செலுத்த வேண் டும்." இதில்,

- குறைவாக வரி செலுத்தும் வழி களை தேடுதல்,
- வரி தவிர்க்கும் கறுப்பு பொரு ளாதாரத்துடன் பணிபுரிதல்,

அனைத்தும் முற்றிலுமாக ஒப்புக் கொள்ள முடியாத செயல்களாகக் கருதப்படும்.

*ஏன் அரசு நியாயமான வரியை மட் டும் எதிர்பார்க்கின்றது?*

- **பொருளாதார சீர்திருத்தத்திற்கான நிதி தேவை** - IMF உடனான ஒப்பந்

தங்களை பின்பற்றி, நாட்டின் நிதிச் சுமையை ஏற்றுக்கொள்ளும் வகையில், வரி வசூல் கட்டமைப்பை கட்டுப்படுத்த வேண்டும்.

- **சமூக நல திட்டங்களுக்கு நிதி தேவை -** இலவச கல்வி, சுகாதார வசதி, வீடமைப்பு திட்டம், விவசாய மானியம், சாகுபடிக்கு நீர்ப்பாசன வசதி ஆகியவற்றுக்கு வரிப்பணம் தான் ஆதாரமாக இருக்கின்றது.

- **அரசாங்கம் விரும்புவது 'ஏமாற்றாத வரி'; அதிக வரி அல்ல! -** தொழில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புகளை வழங்கும் அரசாங்கம், அதற்கு உரிய வரி மட்டுமே வசூலிக்க விரும்புகின்றது.

**புதிய சமூக ஒப்பந்தம் – அரசு + வியாபாரிகள்**

**அரசாங்க உறுதி:**
உட்கட்டமைப்பு, மின், காணி, தண்ணீர் வழங்கல்

**வியாபாரி பொறுப்பு:**
வருமானத்தை முறையாக அறிவித்து வரி செலுத்தல்

**அரசாங்க உறுதி :**
டிஜிட்டல் சேவைகள், சுங்க நடைமுறை எளிமை

**வியாபாரி பொறுப்பு:**
வரி தவிர்க்கும் கலாசாரத்தில் ஈடுபடாமை

**அரசாங்க உறுதி :**
சட்ட ஒழுங்கு பாதுகாப்பு

**வியாபாரி பொறுப்பு**
சர்வதேச முறைகளுக்கு ஏற்ப தொழில் நடத்து

**நாட்டின் வளர்ச்சி என்பது அரசாங்கத்தின் மட்டுமல்ல, வியாபாரிகளின் நேர்மைச் செயற்பாடுகளினதும் பிரதிபலிப்பு**

- ஜனாதிபதி வழங்கிய உறுதிகள் – "நீங்கள் உழைக்கின்றீர்கள், நாங்கள் ஆதரிக்கின்றோம். ஆனால் நாட்டுக்காக உங்கள் பங்களிப்பும் வரி செலுத்துதலாக இருக்க வேண்டும்" என்ற நோக்கத்தில் கூறப்பட்டவை.

- இது சுயநலமான அரசாங்க வேண்டுகோள் அல்ல – இது அறம் சார்ந்த பொருளாதார ஒப்பந்தம்.

**வரிகள் – தடையல்ல, தூணாக இருக்க வேண்டும்**

- பல தொழிலதிபர்கள், வரிகளை பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக பார்க்கின்றனர்.

- ஆனால், நியாயமான வரி வசூலிக்கப்படுகின்றபோது அதனுடன் வரும் மூலதன முதலீடுகள், நாட்டின் அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாடு, சமூக நலப் பணிகள் ஆகியவற்றுக்கு துணை புரியும்.

- " வரிகள் – தடையல்ல, தூணாக இருக்க வேண்டும்" என்ற கருத்து, ஒரு நாட்டின் நிலையான மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு வரிகள் கட்டாய அத்தியாவசியம் என்பதைக் கோடிக்காட்டும்.

**இதை தொழில்முறை மற்றும் பொருளாதார ரீதியாக கீழே விரிவாக விளக்கலாம்:**

1. *வரிகள் என்பது பொருளாதாரத்தின் தூண் – ஒரு அடித்தளம்: வரி என்பது:*

- அரசாங்கத்தின் முக்கிய வருமான ஆதாரம்
- நாட்டின் அடிப்படை உட்கட்டமைப்புக்கு முதலீடு செய்யும் நிதி
- சமூக நல திட்டங்களை நிரந்தரமாக பராமரிக்கும் வழி

வரி இல்லாத மாநிலம் என்பது ஒளியில்லாத விளக்கை போன்றது. ஒளி ஏற்படுவதற்கு வெளியிலிருந்து எப்போதும் சார்ந்தே இருக்கவேண்டி வரும்.

*2. வரிகளைத் தவிர்க்கும் கலாசாரம் – வளர்ச்சிக்கு தடையாகின்றது- பல தொழிலதிபர்கள் வரிகளை:*

- "சுமையாக" (Burden),
- "இழப்பாக" (Loss),
- அல்லது "தண்டனையாக" (Punishment) கருதுகின்றார்கள்.

**இதற்கான காரணங்கள்:**

- கடந்த காலங்களில் அரசாங்கத்தின் அழுக்கான நிதி நிர்வாகம்
- ஊழல், அழிவு, வீணாகும் செலவுகள்
- தரமான சேவைகள் வழங்கப்பட்டதற்கான நம்பிக்கையின்மை

இந்த சூழலில், வரிகள் தடையாக தோன்றியிருக்கலாம். ஆனால் தற்போது அரசாங்கம்:

- திறமையான நிர்வாகம்
- பொறுப்பான செலவீடு
- வெளிப்படையான கணக்கீடு

இவற்றைக் கடைப்பிடிக்க உறுதியளித்துள்ளது.

**3. நியாயமான வரி வசூலிப்பு – தொன்மையான வளர்ச்சி**

- **உட்கட்டமைப்பு அபிவிருத்தி-** வழித்தடங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், தொழில்துறை மண்டலங்கள் அனைத்தும் வரிகளால் நிதியளிக்கப்படுகின்றன..
- **மனித மூலதன வளர்ச்சி-** இலவசக் கல்வி, சுகாதாரம், வேலை முறைகளுக்கான பயிற்சி வரி நிதியளிக்கப்பட்ட முதலீட்டின் அனைத்து நீண்ட கால வருமானங்களும்.
- **பொது சேவைகள் மற்றும் நம்பிக்கையுடன் கூடிய சூழல்-** அடிப்படைச் சேவைகள் கட்டமைக்கப்பட்டால், முதலீட்டாளர்கள் நாட்டை நம்பி முதலீடு செய்கின்றனர்.

*4. வரிகள் – முதலீடுகள் வரவேற்கும் சூழல் உருவாக்குகின்றன*

- பலருக்கு "வரி அதிகம்" என்றால் "முதலீடு வராது" என்ற முன்னோக்கம் உள்ளது.
- ஆனால் உண்மையான முதலீட்டாளர்கள் கீழ்காணும் அம்சங்களை நாடுகின்றார்கள்:

**அம்சம்**

சட்ட ஒழுங்கு

**வரிகளால் ஏற்படும் சூழ்நிலை**
வரிப்பணத்தில் முதலீடு செய்யப்பட்ட காவல், நீதித்துறை அமைப்புகள்

**அம்சம்**
அடிப்படை உட்கட்டமைப்பு

**வரிகளால் ஏற்படும் சூழ்நிலை**
சாலை, துறைமுகம், மின் வசதி—all enabled by taxes

**அம்சம்**
திறமையான மனித வளம்

**வரிகளால் ஏற்படும் சூழ்நிலை**
கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களால் உருவாகும் தொழில்நுட்பமான பணியாளர்கள்

**அம்சம்**
நம்பகமான அரசாங்கம்

**வரிகளால் ஏற்படும் சூழ்நிலை**
வரிகளால் வைக்கப்படும் ஒழுங்குகள் மற்றும் பொறுப்புகள்

*உதாரணம் – இலங்கை தேவைப்படும் மாற்றம்*

இலங்கையில் 1996இல் வரி வருமானம் தேசிய உற்பத்தியில் 23% ஆக இருந்தது. இன்று அது 7.3% ஆகக் குறைந்துள்ளது. இதுதான்:

- IMF ஒப்பந்தத்திற்கு வழி செய்தது
- வெளிநாட்டு கடன்களை நாட வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது

நமது நாட்டின் சுயாதீனத்தை நிலைநாட்ட விரும்பினால், நாம் நியாயமான வரிகளை நேர்மையாக வசூலிக்க வேண்டிய தேவை உள்ளது.

வரிகளை வியாபாரிகள் தடையாக பார்ப்பது, பழைய அரச நிர்வாகத்தில் இருந்த வீழ்ச்சியின் பிரதிபலிப்பு. இன்று அரசாங்கம் நியாயமான வரிகளை மட்டும் எதிர்பார்க்கின்றது.

மக்கள் எதிர்பார்க்கும் தரமான சேவைகளை வழங்க அரசாங்கத்தின் கருவியாக வரிகள் செயல்பட வேண்டும். தடையாக அல்ல, ஒரு நாட்டின் பங்களிப்பாளராகவே வரி செயல்படவேண்டும். வரி செலுத்துவது தேசியக் கடமை அல்ல – நம் எதிர்காலத்தின் முதலீடாக இருக்க வேண்டும்.

"வரி சக்தி" என்பது ஒரு வார நிகழ்வு அல்ல. இது வரலாற்றுச் சுழற்சியில் ஒரு புதிய திருப்பமாகும்.

பொதுமக்கள், தொழிலதிபர்கள், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் – அனைவரும் இணைந்து செயல்படும் பொழுது மட்டுமே நமது பொருளாதாரம் மீள்திரும்பும்.

ஒரு நாடு, அதன் மக்கள் நம்பிக்கையோடு, ஒழுங்குமுறையோடு வரி செலுத்தும் நிலையை அடையும் பொழுதே, அது தன்னிச்சையான, தாராளமான பொருளாதாரத்தை நோக்கி பயணிக்க முடியும்.



ஸ்ரீ AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK), FCPA (Aust.)
*நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA)*
*பட்டயக்கணக்காளர், வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகர்*



# போரும் வடக்கு – கிழக்கு விவசாயமும்

நம்மிடையே உள்ள பாராம்பரிய வேளாண்மை முறைமைகளில் நவீன நுட்பங்களை புகுத்தி, இலங்கையில் ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான நவீன விவசாயக் கொள்கைகளை உருவாக்கும் சாத்தியங்கள் குறித்து ஆராய்ச்சி முடிவுகளுடன் தர்க்கித்து, மக்களுக்கும், விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது ஆராய்ச்சித் துறை மாணவர்களுக்கு உசாத்துணை ஆதாரமாகவும் 'இலங்கையின் வேளாண்மை முறைமையில் நவீன நுட்பங்கள்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் அமைகிறது. இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக – பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால் உண்டாகக்கூடிய விளைவுகள், இலங்கையில் பசுமைப் புரட்சிக்காக முன்வைக்கப்படவேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் இந்தக்கட்டுரைத்தொடர் விபரிக்கின்றது.



இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட பேரினவாதம் சார்பான சட்டங்களும் மற்றும் சட்டத் திருத்தங்களும், உதாரணமாக தனிச் சிங்களச் சட்டம், பௌத்தம் அரச மதமாக்கப்படல், கல்வி தரப்படுத்தல் சட்டங்கள், தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், இனக் கலவரங்கள், வேலைவாய்ப்பில் இனப்பாகுபாடு, ஆட் கடத்தல்களும் காணாமல் போதல்களும், மேலும் பலவும், தமிழ் இளைஞர்களை இலங்கை அரசிற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டங்களை முன்னெடுக்க தூண்டின. தமிழினம் மனித இனத்தில் தனக்கென்று ஒரு தனித்துவமான நாகரிகத்தையும், சமூக அடையாளங்களையும் மற்றும் நீண்ட வரலாற்றுப் பின்னணியையும் கொண்டது. மூத்த இனமாக வரலாற்றில் இடம்பிடித்த ஒரு இனம், இன்னொரு இனத்தின் கீழ் தமது அடையாளங்களை இழந்து வாழ விரும்பவில்லை. எனவேதான் தாயகம், தேசியம், மற்றும் தன்னாட்சி கோரி, போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியது.




பேச்சுவார்த்தைகள் தோல்விகளில் முடிய அரச படைகளின் ஆயுதமுனைப் போராட்ட அடக்குமுறைகள் காரணமாக ஆயுத ரீதியான உள்நாட்டுப் போர் 23 யூலை 1983 முதல் 26 இடம்பெற்று 2009 இல் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்தது.

இந்த வேண்டாத போரினால் இலங்கையின் வடக்கு, கிழக்கின் பொருளாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இடப்பெயர்வுகளினால் பல்லாயிரக் கணக்கானோர் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்தனர், உருவாக்கப்பட்ட உயர் பாதுகாப்புவலயங்கள் மற்றும் உள்நாட்டு இடப்பெயர்வுகள் காரணமாக அரச கட்டுப்பாட்டில் இருந்த விவசாய நிலங்கள் விடுவிக்கப்படாமல் காடாகின மற்றும் பரம்பரை விவசாயத்தை பெருமளவானோர் கைவிட்டனர். ஆனால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்கள் அரசாங்கத்தினால் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டும் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட தற்சார்பு விவசாயம் மற்றும் உணவு உற்பத்தி மூலம் விவசாயத்தில் ஈடுபட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்டார்கள். ஆனால் அரச கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு – கிழக்கின் விவசாய உற்பத்தித் திறன் வீழ்ச்சி அடைந்தது. இன்று போரில்லாத இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை அன்று பொறியில் சிக்குண்ட மக்கள் சந்திக்கவில்லை. அது எவ்வாறு நடந்தது? எவ்வாறான விவசாயத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன? என்பதையே இந்த அத்தியாயம் விரிவாக ஆராய்கிறது.

## உள்நாட்டுப் போரும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் விவசாய வீழ்ச்சியும்

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மொத்த விவசாய நிலம் சுமார் 735,000 ஹெக்டேயர். இவற்றில் நெல் நிலத்தின் அளவு 265,000 ஹெக்டேயர் அல்லது விவசாய நிலத்தின்

35%; 125,000 ஹெக்டேயர் வீட்டுத் தோட்டங்களாகவும் மற்றும் 350,000 ஹெக்டேயர் சேனா மானாவாரிப் பயிர் நிலமாகவும் மற்றும் மேய்ச்சல் தரைகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வேலை செய்யும் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 570,000 பேரில் 50% க்கும் அதிகமானவர்கள் விவசாயத்தையே முக்கியமான தொழிலாகக் கொண்டிருந்தார்கள். இதனால் இலங்கையின் மொத்த உள்நாட்டு விவசாய உற்பத்தியில் 20.5% இனை வடக்கு - கிழக்கு பங்களிப்புச் செய்திருந்தது. மொத்த நெல் உற்பத்தியில் 1/3 பங்கு வடக்குக் -கிழக்கு மாகாணங்களில் இருந்தே இலங்கைக்குக் கிடைத்தது. கால்நடைகளைப் பொறுத்தவரையில், இலங்கையின் மொத்தக் கால்நடையில் கிட்டத்தட்ட 60% வடக்கு -கிழக்கு மாகாணங்களிலேயே காணப்பட்டது. யாழ். குடாநாட்டில் இருந்து சிவப்பு வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, புகையிலை, காய்கறிகள், வாழை போன்ற விவசாய விளைபொருட்கள் மற்றும் திராட்சை போன்றன அதிகமாக சாகுபடி செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டு விவசாய உற்பத்தியில் வடக்கு மாகாண விவசாயிகள் அதிக இலாபம் ஈட்டினர். அம்பாறை மாவட்டம் நெல் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்தது. வருடத்தில் மூன்று போகங்களில் நெல் பயிரிடப்பட்டது. மட்டக் களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் பால் மற்றும் இறைச்சிக்கு பேர் போன இடங் களாகத் திகழ்ந்தன. சிறீமா ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட உணவு இறக்குமதித் தடைக் காலத்தில் வடக்கு – கிழக்கு மாகாணங்களை நம்பியே முழு இலங்கையும் இருந்தது என்றால் மிகையாகாது.



பனைசார் உற்பத்திப் பொருட்கள், உளுந்து, பயறு, தேங்காய் மற்றும் சிறு தானியங்கள் என்பன யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் கணிசமான அளவில் விளைவிக்கப்பட்டன. உணவுக்குப் பஞ்சம் என்பதே வடக்கு – கிழக்கில் இருந்ததில்லை. உள்நாட்டுப் போர் ஏற்படுத்திய தாக்கத் தினைத் தொடர்ந்து வடக்கு- கிழக்கு விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு விவசாய உற்பத்தியில் வடக்கு - கிழக்கின் பங்களிப்பு 10% ஆகக் குறைந்தது.

1982 முதல் 2002 வரை பதியப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் போரினால் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களில் 25%க்கும் அதிகமானவை விவசாயம் செய்யாமலே காணப்பட்டது. ஆனால் இந்தக் காலகட்டத்தில் போரினால் பாதிக்கப்படாத வட மத்திய மாகாணத்தில் மாத்திரம் விளைச்சல் நிலங்களின் விஸ்தீரணம் 30% அதிகரித்தது. இதற்கு மிக முக்கியமான காரணம் உள்நாட்டு இடப்பெயர்வினால் மக்கள் தமது சொந்த விவசாய நிலங்களில் இருந்து குடிபெயர்ந்தமை. உதாரணமாக 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து 1997ஆம் ஆண்டு வரை வடக்கு மாகாணத்தின் தீவகப் பகுதிகள், முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டத்தின் சிலபகுதிகள் இடப்பெயர்வு காரணமாக முற்று முழுவதுமாக விவசாயம் செய்யப்படாமல் புதர்கள் மண்டிய காடுகளாக மாறின மற்றும் இடம்பெயர்ந்த

மக்கள் விட்டுச்சென்ற கால்நடைகள் கட்டாக் காலிகளாக மீளக் குடியமர்ந்த பகுதிகளில் விவசாயத்திற்கு இடையூறு விளைவித்தன. பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக பயிர் செய்யும் நிலங்களுக்குச் செல்லாமை மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் வடக்கு- கிழக்கில் கிட்டத்தட்ட 7,000 ஏக்கர் நிலம் (தற்போதைய விலையில் 2$ பில்லியன் மதிப்புள்ள – நிலம்) கையகப்படுத்தும் அறிவிப்புகளைப் பயன் படுத்தி கைப்பற்றப்பட்டது. இதில் 6,381 ஏக்கர் காணியின் பெரும்பகுதி வடக்கில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளது.



2016ஆம் ஆண்டில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வடக்கு மற்றும் கிழக்காகத் தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னர் இன்றுவரை விவசாய உற்பத்தியில் மிகவும் பின்தங்கிய மாகாணங்களாகவே இன்றும் காணப்படுகின்றன.

### போரின் பின்னரான வடக்கு -கிழக்கு மாகாணங்களின் விவசாயம்

தற்போதைய மதிப்பீடுகளின் படி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுமார் 145,000 குடும்பங்களைச் சேர்ந்த 700,000 பேர் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர். வடக்கு மாகாணத்தில் உள்ள குடும்பங்களில் 58% (36,500) மற்றும் கிழக்கு மாகாணத்தில் (65,800) 85% குடும்பங்கள் பிரதானமாக நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. மேலும் 14% மானோர் வடக்கிலும் 13% மானோர் கிழக்கிலும் கலப்பு பயிர் மற்றும் பிற பணப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். மீதமுள்ள வடக்கு (28%) மற்றும் கிழக்கு (2%) விவசாயிகள் காய்கறி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். வடக்கில் காய்கறி மற்றும் பணப்பயிர்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் கிட்டத்தட்ட 75% விவசாயிகளின் உயர் திறன்வாய்ந்த விளைச்சல் நிலங்கள் யாழ்ப்பாண குடாநாட்டிலேயே காணப்படுகின்றன.

2002ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட போர்நிறுத்த காலத்தில் இருந்து உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் வரை உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதி உதவியில் விவசாய மற்றும் மீன்பிடியை மீளக் கட்டிஎழுப்ப பல்வேறு மீள் எழுச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டன. இவ்வாறு தொடங்கப்பட்ட விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட குளங்கள் பல புனரமைக்கப்பட்டுள்ளன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன, மக் கள் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம் பிப்பதற்கு தேவையான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் இன்னும் பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாமல் மற்றும் மீளக் குடியமர்த்தப்படாமல் காணப்படுவதனாலும், அரசாங்கத்தின், ஸ்திரத்தன்மை இல்லாத விவசாயக் இறக்குமதி மற்றும் மறுசீரமைப்புக் கொள்கையினாலும், விவசாயத் துறையில் பாரிய முதலீடுகளை மேற்கொள்ளப் பணம் இல்லாத கார ணத்தினாலும், புலம்பெயர் தமிழர்கள் வடக்கு- கிழக்கின் விவசாயத்தை நேரடி முதலீடுகள் மூலம் அபிவிருத்தி செய்வதில் அரசினுடைய முட்டுக் கட்டையினாலும் மற்றும் போரினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களினால் வடக்கு- கிழக்கில் பலர் தமது பரம்பரை விவசாயத்தைக் கைவிட்டு தமது பிள்ளைகளை வேறு தொழில்களிற்கும், வெளிநாடுகளுக்கு அனுப்புவதிலும் முனைப்புக் காட்டுவதினாலும் மற்றும் விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கு மதிப்பளிக்காததினாலும், வடக்கு- கிழக்கு விவசாயம் பாரிய வளர்ச்சி இன்றி வர்த்தக நோக்கமின்றி துடுப்பில்லாத படகுபோல் நோக்கமின்றிச் செல்வதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் இன்று ஏற்பட்டிருக்கின்ற இந்த பொருளாதார வீழ்ச்சியை விவசாயத் துறையினால் மட்டுமே மீட்க முடியும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

## போர்க்காலத்தில் வன்னிப் பெருநிலப் பரப்பினுள் வெற்றிபெற்ற விவசாயம்

போர்க்காலத்தில் வன்னிப் பெரு நிலப்பரப்பு மற்றும் வவுனியா – முல்லைத்தீவு ஆகிய பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் தற்சார்புப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக விவசாயம் வடிவமைக்கப்பட்டிருந்தது. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் அனைத்து விவசாய நிலங்களும் பண்படுத்தப்பட்டு உணவு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. 1994-1996 ஆண்டுகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் அகப்பட்டுக்கொண்ட அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளரான நீரன் (Neeran) என்பவர் தனது அனுபவத்தை The Civil Administration in Thamil Eelam (தமிழீழத்தின் சிவில் நிர்வாகம்) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு வர்ணித்துள்ளார். அவர் கூறியதாவது '1994இல் விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுக் குழு தயாரித்த 'தமிழீழத்தின் விவசாயக் கொள்கை' கையேட்டை நான் மதிப்பாய்வு செய்தேன். அந்த விவசாயக் கொள்கையில் சுற்றுச்சூழல் பாதிக்காதவாறு அனைத்து விவசாய முறைமைகளையும் பசுமைநுட்பங்களையும் பயன்படுத்தி நிலைத்திருக்கத்தக்க விவசாயத்தினூடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்பதோடு மட்டுமல்லாமல் தமிழீழம் கிடைத்தபின்பு ஏற்றுமதி விவசாயமாக கொண்டு செல்லும் வழிவகைகளும் பரிந்துரைக்கப்பட்ட ஒரு தலைசிறந்த ஆவணமாகும். என்னால் அந்த கொள்கைக் கையேட்டில் எந்தவித குறையோ திருத்தமோ செய்ய முடியவில்லை அந்த அளவுக்கு அனைத்து விவசாயத்துறை சார்ந்த நிபுணர்களின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கொள்கைகளை முன்னிறுத்தி அவர்கள் போர், செயற்கை உரங்கள் – எரிபொருள் தடைக்கு மத்தியில் உணவு உற்பத்தியில் நான்கு வருடங்களில் தன்னிறைவும் கண்டார்கள். இந்த உணவுத் தன்னிறைவுக் கொள்கை இலங்கை அரசாங்கத்தினால் சுதந்திரம் அடைந்ததில் இருந்து கடைப்பிடிக்கப்பட்டும் இன்றுவரை அதனை அடையமுடியவில்லை. யுத்தம் மற்றும் அம்மோனியம் சல்பேட் மீதான தடை இல்லாவிட்டால், வடக்கில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். அரிசியை விட உருளைக்கிழங்கு, புகையிலை, பழ மரங்கள் போன்ற பல்வேறு பணப்பயிர்கள் மிகவும் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டன. விவசாயப் புரட்சி முழுமையடைந்து, அமைதி திரும்பியவுடன் தமிழீழம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதற்காக விவசாய ஆராய்ச்சி நிலையங்களும் தோட்ட மையங்களும் புலிகளால் நிறுவப்பட்டன.

ஜூலை/ஆகஸ்ட் 1995 ஆம் ஆண்டு வடக்கில் அமோனியம் உரத்தை அரசாங்கம் தடை செய்தபோது, புலிகளின் நிர்வாகம் விவசாய பீடம், விவசாயிகள் நலச் சங்கங்கள் மற்றும் விரிவாக்க பணியாளர்களின் ஆலோசனை மற்றும் உதவியோடு 'விளைபூமி' என்ற உணவு உற்பத்தி திட்டத்தை நிறுவினார்கள். விளைபூமித் திட்டம் வெற்றிபெற விவசாயிகள், விவசாய பீட விரிவுரையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டத்தைத் தயாரித்து அதனை நடைமுறைபடுத்தினார்கள். இதன் மூலம் யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது வன்னி சென்ற மக்கள் உணவுப் பற்றாக்குறையை சந்திக்கவில்லை என்பது அனைவரும் அறிந் ததே.

போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உணவு உற்பத்தி தன்னிறைவு அடைய மிகமுக்கியமான காரணங்களாக விவசாயத்துறைக்கு கொடுத்த முன்னுரிமையும், தூரநோக்குச் சிந்தனையும், ஊழல் அற்ற ஆட்சியும், மக்களின் விடுதலைக்கான போராட்டத்தின் மீதான அவாவும், விடுதலைப் புலிகளின் சட்டத்துறை மீது மக்களுக்கு இருந்த பயமுமே காரணம் ஆகும். இப்படியான திறன்கள் இலங்கை அரசிற்கும் மற்றும் அரசியல்வாதிகளுக்கும் இருந்தால் இலங்கையும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருக்கும், பிற நாடுகளில் உணவுக்கு பிச்சை எடுக்க வேண்டிய நிலையும் வராது.

தமிழர் பொருண்மியம்
வாரமலர் TAMILS ECONOMY

# சூரிய காந்தி

பலரும் அறிந்த ஒரு பூச் செடிதான் சூரியகாந்தி. ஆங்கிலத்தில் *Sunflower* என்று அழைப்பர். இப்பெயர் வரக் காரணம் சூரியகாந்திப் பூ சூரியனது தோற்றத்தில் இருப்பதாலாகும். இதன் அறிவியல் பெயர் ஹீலியாந்துஸ் (*Helianthus*). கிரேக்க மொழியில் ஹீலியா என்பது சூரியனையும், ஆந்துஸ் என்பது பூவையும் குறிக்கும்.

சூரிய காந்தியின் தாயகம் வட அமெரிக்காவாகும். அமெரிக்காவின் கன்சாஸ் மாநிலத்தின் மாநிலப் பூவாகவும் இது விளங்குகின்றது. உக்ரேன் நாட்டின் தேசிய மலரும் சூரியகாந்திதான். பசுமைக்கொள்கையின் அடையாளமாக சூரியகாந்தி அடையாளப்படுத்தப்படுகின்றது. அத்தோடு உலகப் பிரபல ஓவியர் வான்கோவின் ஓவியங்களின் கருப்பொருளாக சூரியகாந்திகள்தான் அமைந்துள்ளன. இவ்வாறு சூரியகாந்திகள் எமது வாழ்வில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன.

## தாவரத்தின் அமைப்பு



சூரியகாந்தி செடி வகையைச் சேர்ந்தது. அதிலும் செடியினங்களிலேயே மிகவும் பெரியது இதுதான். சூரியகாந்திச் செடி 10 அடி உயரத்திற்கு வளரக்கூடியது. மிக வேகமாக வளரக்கூடிய செடியும் இதுதான். சாதாரண மனித உயரத்தைவிட நான்கு அல்லது ஐந்து அடிகள் உயரமாக வளரும். அந்த உயரமான தண்டில் இலைகள் வளரும். செடியின் உச்சியில் பூ பூக்கும். பூ 30 செ.மீ. அகளத்தில் இருக்கும். ஒரு செடியில் ஒரு பூ மாத்திரமே பூக்கும். ஆனால்

ஆயிரக்கணக்கான சந்ததிகளுக்கான விதை களை விதைத்துவிட்டே மடியும். சூரியகாந்திப் பூ ஒன்றை எடுத்து நோட்டமிட்டால் அதில் இன்னும் சின்னஞ்சிறிய ஆயிரக்கணக்கான பூக்களைக் கண்டுகொள்ளலாம். ஆக சிறு சிறு பூக்களாலான பெரிய ஒரு பூதான் சூரிய காந்திப் பூ.

## மகரந்தச் சேர்க்கை



அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளில் இலாபமீட்டும் நோக்கில் ஏக்கர் கணக்கான நிலத்தில் சூரியகாந்திச் செடிகள் பயிரிடப்படுகின்றன. காய்ந்த விதைகளை மண்ணில் புதைத்து, பசளையும் நீரும் ஊற்றிப் பராமறிக்கவேண்டும். இரண்டு வாரங்களில் விதை பூமியுடன் மோதி வெளியே தலைகாட்ட ஆரம்பிக்கும். ஆறு மாதங்களில் எட்டு அல்லது 10 அடியைத் தொட்டுவிடும். அதற்குள் மொட்டுக்கள் அரும்பி பூவாக மலர ஆரம்பித்திருக்கும். சூரியகாந்திப் பூ வந்ததும் அயல் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்தி அதிக விதை உற்பத்தி செய்யலாம். அதாவது ஒரு பூவை மற்றதொரு பூவுடன் உராயும்படி செய்யவேண்டும்.

இதற்கு உகந்த பொருத்தமான நேரம் காலை 9 மணியிலிருந்து 11 மணிவரைதான். தொடர்ந்து 10 நாட்களுக்குள் இவ்வாறு செய்ய வேண்டும். விவசாய நிலங்களாக இருந்தால் அங்கு காற்றடிக்கும்போது பக்கத்து பக்கத்திலிருக்கும் பூக்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து மகரந்தச் சேர்க்கை செய்துகொள்கின்றன. அல்லது தேன் பூச்சி, வண்டு, வண்ணாத்தி போன்றவற்றால் மகரந்த மணிகள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு கடத்தப்பட்டு சேர்க்கை நடைபெறுகின்றன.

## சூரியகாந்தி விதைகள்



சூரியகாந்திப் பூவின் நடுப்பகுதியை உற்று நோக்கினால் அங்கும் சிறிய சிறிய பூக்கள் இருப்பதை காணலாம். அவைதான் சூரியகாந்தி காய்ந்துபோகும்போது விதை களாக மாறுகின்றன. சாதாரணமாக ஒரு சூரியகாந்திப் பூவில் 2000 வரையான விதைகள் காணப்படுகின்றன. பூக்களில் விதைகள் முதிர்ச்சி அடையும்போது பச்சைக் கிளிகள் அவற்றை உண்பதற்காக அலகால் கொத்தி சேதத்தை உண்டாக்கும். எனவே கிளிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அவ்வப் போது தகரப் பெட்டிகளில் அடித்து சப்தம் எழுப்பி கிளிகளைத் துரத்துவார்கள் விவசாயிகள்.

சூரியகாந்தி விதைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று கருப்பு. மற்றையது வெள்ளைக் கோடுகளிடப்பட்ட விதைகள். சமையல் எண் ணெய்க்காக கருப்பு விதைகள் பயன்படுத்தப் படுகின்றன. மாஜரீன் தயாரிப்பதற்காகவும் சிற்றுண்டிகள் செய்வதற்காகவும் வெள்ளை நிற விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. சூரிய காந்திகளிலும் வெவ்வேறு வகை இருப்பதனால் தாவர வகைகளுக்கு ஏற்ப விதைகளும் பூவின் நிறங்களும் வித்தியாசப்படுகின்றன.

## சூரியனைச் சுற்றும் சூரியகாந்தி



சூரியகாந்திப் பூவில் இருக்கும் அற்புதமே இதுதான். காலையில் கிழக்கு நோக்கும். மதிய நேரத்தில் நேராய் வானை அண்ணாந்து பார்க்கும். மாலையில் மேற்கை நோக்கும். சூரியன் மறைந்ததும் தலையைத் தொங்கப்போட்டு நிற்கும். இப்படி ஒவ்வொருநாளும் சூரியனை எதிர்பார்த்துக் காத்திருந்து சூரியன் போகும் திசையெல்லாம் பின்துயரும் சூரிய காந்திப் பூக்கள் பெரியதொரு அற்புதம்தான். இங்குதான் அல்லாஹ் அவற்றுக்கு வழங்கியுள்ள இல்ஹாம் எனும் உள்ளுணர்வு உதிப்பு, வேலைசெய்கின்றது.

அதுவல்லாமல் சூரியனைப் பின்துயர வேண்டுமென்ற எந்த சுய புத்தியும் இல்லை அதற்கு. தாவரங்கள் ஒளித்தொகுப்பின் மூலம் உணவுற்பத்தி செய்துகொள்ள சூரியஒளி மிக அவசியம். அதிலும் சூரியகாந்திக்கு சூரிய வெப்பம் சரியாகக் கிடைத்தாகவேண்டும். அதனால்தான் வெப்ப வலயப் பிரதேசங்களில் சூரியகாந்தி நன்றாக வளர்கின்றது. எனவேதான் தனது முகத்தை சூரியனை நோக்கியே திருப்பிக்கொள்கின்றது. சூரியகாந்திச் செடியை நெருப்பிட்டுக் கொழுத்தினாலும் மீண்டும் அது தன் விதைகளைக்கொண்டு பீனிக்ஸ் பறவைபோன்று முளைத்துவிடும். வெப்பத்தைத் தாங்கும் சக்தி அதற்கு உண்டு.

## மருத்துவ நலன்கள்




உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களையும் மருத்துவ பயன்களையும் சூரியகாந்தியின் முழுத்தாவரமும் உள்ளடக்கியிருக்கின்றது. சிறந்த மருத்துவ குணம் கொண்டவை. சூரிய காந்தி எண்ணெயில் கல்சியம், கொழுப்பு உட்பட பல்வேறு விதமான சத்துகள் அடங்கி உள்ளன. மேற்கு நாடுகளில் 80 சதவிகித சமையலறைகளை சூரிய காந்தி விதை எண்ணெய் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. விட்டமின்கள், அமிலங்கள், வேதிப்பொருட்கள் என அனைத்தையும் தன்னகம்கொண்டுள்ளன இவை. எண்ணெய் அதிக கொழுப்புச்சத்தை குறைக்கும். இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படும்.

விதையில் உள்ள பொட்டாசியம் சத்து மிகுந்த பயனளிக்கக் கூடியதாகும். ஒரு கோப்பை சூரிய காந்தி விதையில் ஆயிரத்து 300 மில்லி கிராம் பொட்டாசியம் காணப்படுவதாக உணவியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இதன் விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெயை உபயோகிப்பதன் மூலம் பக்கவாத நோய் தாக்குதலும், சிறுநீரகத்தில் கல் உருவாவதும் தடுக்கப்படுகிறது. சிறிதளவு சூரிய காந்தி விதையில் 32 சதவிகிதம் மெக்னீசியம் காணப்படுகிறது. இது நரம்பு செல்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தசை தொடர்பான நோய்கள் வராமல் தடுப்பதில் மெக்னீசியத்தின் பங்கு முக்கியமானது. இதயம் தொடர்பான நோய்கள், இரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் சூரிய காந்தி விதைகள் கட்டுப்படுத்துகின்றன. ஆஸ்துமா தொடர்பான நோய்களையும் குணப்படுத்துகின்றன.


சிகரட் பிடிப்பதற்கு அடிமையாகியுள்ளோரை அதிலிருந்து மீட்பதற்கு சூரிய காந்தி விதைகள் மிகவும் உபயோகமாகின்றன. கறுப்புத் தோல் நீக்கிய விதைகளைத் தினமும் உண்டுவந்தால் புகைபிடிக்கும் எண்ணம் கூட மாறும் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். மலேரியா காய்ச்சலை போக்கக் கூடிய சிறந்த மருந்தாகவும் சூரியகாந்தி விளங்குகிறது. இப்படி மலர் எனப் பார்த்தால் அழகையும் மருந்தெனப் பார்த்தால் குணத்தையும் தரும் அல்லாஹ்வின் அற்புதமானதொரு படைப்புதான் சூரியகாந்தி. நீங்களும் வீட்டில் நட்டுப்பாருங்களேன்!

●●● மலர்விழி

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**






காலக்கவிதை

கடவுள் மனிதனை ஒரு மகத்தான
இயற்கை நிறைந்த பூமியில் படைத்தான்...
செயற்கையை விரும்பி இயற்கையை அளிக்கிறோம்
அழிவது இயற்கை மட்டுமல்ல
நம் வாழ்க்கையும் தான்...
நெகிழியை புதைத்து மண்ணின் வளமையை
குறைத்தோம்..
மரத்தை வெட்டி காற்றை கரைத்தோம்
காற்றை கூட காசுக்கு வாங்குவோம்...
நீர் இன்றி அமையாது உலகு ஆனால்
நீர் வீழ்ச்சிகளில் குப்பையை கொட்டி
குட்டிசுவராக்கினோம்..
நிலத்தை அளித்தோம்!
நீரை குறைத்தோம்!
காற்றை அடைத்து
கண்ணீர் விடுகின்றோம்!
போதுமே இந்த போராட்டம்
இயற்கையை காத்து இன்பமாய் வாழ்வோம்!!
வருங்கால சந்ததிக்கு சேர்த்து வைப்போம்
நம் வாழ்வின் அழகிய இயற்கை செல்வங்களை...